Mat Sep-2011

**8501**

Register Number

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | |

# தமிழ் — முதல் தாள்

## ( செய்யுள், உரைநடை )

நேரம் : $2\frac{1}{2}$ மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

*குறிப்பு :* i) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும் இருத்தல் வேண்டும்.

ii) வினா எண் III க்குச் செய்யுள் வடிவில் விடை எழுதுதல் வேண்டும்.

I. பின்வரும் வினாக்களுள் எவையேனும் **ஏழனுக்கு** மட்டும் ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளில் விடை எழுதுக. $7 \times 2 = 14$

1. எவ்விரண்டில் எல்லா அறங்களும் உள்ளன ?
2. தன்னைத் துன்பத்தினின்றும் காத்துக் கொள்ள நினைப்பவன் யாது செய்தல் வேண்டும் ? ஏன் ?
3. சிலம்பு உணர்த்தும் மூன்று நீதிகளைக் குறிப்பிடுக.
4. 'காண நோற்றிலன் அவன் கமலக் கண்களால்' - விளக்குக.
5. 'இயேசு உலக இரட்சகர்' என்பதைக் காட்டுவதற்கான சான்று யாது ?
6. குறுந்தொகை சிறுகுறிப்பு வரைக.
7. மேற்குவானில் மையிருட்டுக் கைந்நீட்டும் போது நிகழ்வன யாவை ?
8. தொற்றும் கிருமித் தொல்லையிலிருந்து தப்ப, முற்றும் ஒழிக்க வேண்டியது யாது ?
9. சாகித்திய அகாடமி விருது பெற்ற கண்ணதாசனின் நாவல் எது ?

II. பின்வரும் வினாக்களுள் எவையேனும் **ஐந்தனுக்கு** மட்டும் ஒவ்வொன்றிற்கும் ஆறு வரிகளில் விடை தருக. $5 \times 4 = 20$

10. ஊக்கமுடையாரது உயர்வினைக் கூறுக.
11. திரு. வி. க வேண்டுவன யாவை ?
12. அறப்பயனைக் கட்டுங் கயிறாக எவற்றைக் கூறியுள்ளார் ?
13. இளங்கோவடிகள் கோவலனை எவ்வாறு அறிமுகப்படுத்துகிறார் ?
14. அண்ணாமலை ரெட்டியாரின் கற்பனை வளத்தைச் சான்றுடன் விளக்குக.
15. பாரத நாட்டை ஒளிர்தரு நாடு எனப் பாரதியார் கூறக் காரணங்கள் யாவை ?
16. 'ஒன்றுமே தொழ நம்வினை ஒயுமே' - இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

[ Turn over

III. பின்வருவனவற்றை அடிபிறழாமல் எழுதுக :

17. 'தன்னரிய' ..... எனத் தொடங்கும் இரட்சணிய யாத்திரிகப் பாடலை எழுதுக. 4

18. 'வசையென்ப' ..... எனத் தொடங்கும் குறட்பாவை எழுதுக. 2

19. 'செருக்கு' என முடியும் குறட்பாவை எழுதுக. 2

IV. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் **ஒன்றனுக்கு** மட்டும் பதினைந்து வரிகட்கு மிகாமல் விடை எழுதுக : 1 × 8 = 8

20. இடனறிதல் பற்றி வள்ளுவர் கூறும் கருத்துக்களைத் தொகுத்தெழுதுக.

21. அனுமன் அறநெறிகளை உணர்ந்தவன் என்பதைக் கம்பராமாயணம் கொண்டு விளக்குக.

22. பாரதிதாசன் உலக ஒற்றுமை பற்றிக் கூறும் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

V. 23. பொருத்துக : 4 × 1 = 4

| *சொல்* | | *பொருள்* |
|---|---|---|
| அ) தொடை | — | தேனீ |
| ஆ) நறை | — | திரை |
| இ) பிடி | — | மாலை |
| ஈ) மதுகரம் | — | தேன் |
| | — | பெண் யானை. |

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்க :** 6 × 1 = 6

24. கண்ணகியின் தந்தை .................. .

அ) மாசாத்துவான் ஆ) மாநாய்கன் இ) செங்கண்ணான்.

25. கம்பரைப் புரந்த வள்ளல் .................. .

அ) குமணவள்ளல் ஆ) சடையப்ப வள்ளல் இ) பாரி வள்ளல்.

26. வள்ளத்தோள் பாடலை மொழிபெயர்த்தவர் .................. .

அ) கவிமணி ஆ) காமராசன் இ) துறைவன்.

27. புறநானூற்றுப் பாடல்கள் சிலவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் .................. .

அ) ஜி. யு. போப் ஆ) வீரமாமுனிவர் இ) ஹீராஸ் பாதிரியார்.

28. சிற்றிலக்கிய வகை .................. .

அ) அறுபத்து நான்கு ஆ) தொண்ணூற்றாறு இ) எண்பத்தாறு.

29. திருப்பாமாலைப் பாடல்கள் மேற்கோளாகக் காட்டப் பெற்றுள்ள இலக்கண நூல் .................. .

அ) யாப்பருங்கலக் காரிகை

ஆ) தண்டியலங்காரம்

இ) புறப்பொருள் வெண்பா மாலை.

VI. பின்வரும் வினாக்களுள் எவையேனும் **ஐந்தனுக்கு** ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளில் விடை எழுதுக.
$5 \times 2 = 10$

30. இந்தியாவின் தேவைகளென அப்துல்கலாம் குறிப்பிட்டுள்ளவை யாவை ?

31. கலை இருபொருள் கூறி விளக்குக.

32. செம்மறி ஆட்டை உவமையாகக் கொண்டு மு. வ. கூறும் கருத்து யாது ?

33. தூங்கிக் கொண்டிருந்த தமிழ் மக்களிடையே சிதம்பரனார் உண்டாக்கிய உணர்வுகளை எழுதுக.

34. குடும்பத்தில் பிறக்கும் உயர்ந்த குணங்கள் யாவை ?

35. ஔவையார் பாடலில் இடம்பெற்றுள்ள அறிவியல் நுட்பம் வாய்ந்த தொடர்கள் யாவை ?

36. பாடப்படுவதற்குரிய தகுதி செல்வர்களிடம் இல்லை என்பதறிந்து குறுநகை தோன்ற ஔவையார் யாது கூறினார் ?

VII. கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் **நான்கனுக்கு** ஒவ்வொன்றிற்கும் *ஆறு* வரிகளில் விடை எழுதுக.
$4 \times 4 = 16$

37. இந்தியர்கள் தம் இலக்குகளை அடைவதோடு உன்னத உயர்வும் அடைய அப்துல் கலாம் கூறுவனவற்றை எழுதுக.

38. 'சர்க்கரை தொண்டை மட்டும்; சவ்வாது கண்ட மட்டும்' என்னும் பழமொழி விளக்கும் கருத்தை எழுதுக.

39. எவற்றை மேன்மேலும் படிக்க வேண்டும் என மு. வ. விரும்புகிறார் ?

40. சுதேசி நாவாய்ச் சங்கம் - குறிப்பெழுதுக.

41. இராமன் விளைவுக்கு அடிப்படையாக அமைந்தது எது ? எப்படி ?

42. 'அம்பலத்தாடியார் அறிவிற் குறைபாடுடையவர்' என்பதற்கு இரு சான்றுகள் தருக.

VIII. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் **ஒன்றனுக்கு** மட்டும் பதினைந்து வரிகட்கு மிகாமல் விடை எழுதுக.
$1 \times 8 = 8$

43. 'தமிழ் இன்பத்திலும் சிறந்த இன்பம் இவ்வுலகிலுண்டோ' என்று திரு. வி. க எவ்வாறு பெருமிதம் கொள்கிறார் ?

44. சாதிக் கொடுமையையும், தீண்டாமைக் கொடுமையையும் ஒழித்ததில் பெரியாரின் பங்கு பற்றித் தொகுத்து எழுதுக.

45. உமறுப் புலவர் சீறாப்புராணத்தைச் செஞ்சொற்கவிதையாக அமைத்த நிகழ்ச்சியைத் தொகுத்து எழுதுக.

IX. சரியான விடையைத் தேர்ந்தெடுக்க : 4 × 1 = 4

46. பொருளாதாரச் சாதனைகளுக்கு இட்டுச் செல்வது .................. .

அ) மனித ஆற்றல் வளம்

ஆ) கணிப்பொறி நிபுணத்துவம்

இ) இயற்கை வளம்.

47. ஒரு துறைக் கோவை என்பது .................. .

அ) அகத்துறைச் சிற்றிலக்கியம்

ஆ) சிலேடை

இ) அந்நாதி.

48. காந்தியார் காட்டிய .................. போராட்டத்தைப் பெரியார் விழிப்பாகக் கடைப்பிடித்தார்.

அ) அந்நியப் பொருள் புறக்கணிப்பு

ஆ) உப்புக் காய்ச்சுதல்

இ) ஒத்துழையாமை.

49. கபிலர் கண்ட அறிவியல் உண்மையை உணர்த்தும் கபிலர் பாடல் அமைந்த தொகுப்பு .................. .

அ) திருவள்ளுவமாலை

ஆ) வெண்பாமாலை

இ) பெண்மதி மாலை.

X. கீழ்க்காணும் சொற்களுள் எவையேனும் இரண்டினை மட்டும் வாக்கியத்தில் அமைத்து எழுதுக. 2 × 1 = 2

50. அ) கொழுகொம்பு

ஆ) தலைசிறந்த

இ) மட்டற்ற.